16.03.2026

OS. No.62/2018

**வா.சா.1 –** திரு.லோகநாதன், த/பெ.திரு.பெரியசாமி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் முதுகலை வணிகவியல் பட்டம் மேற்படிப்பு படித்திருக்கிறேன். எனக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது சகோதரர் ஆகிய முதல் வாதி காமராஜ் இருக்கிறார். இந்த வழக்கை தாக்கல் செய்தபோது எனது சகோதரர் காமராஜ் மனநலம் குன்றி இருக்கிறார் என்று குறிப்பிட்டு அவரது மனைவியை பாதுகாவலராக காண்பித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது சகோதரர் காமராஜ் மனநலம் குன்றி இருக்கவில்லை என்று பிரதிவாதிகள் ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு நீதிமன்றம் விசாரணை செய்து காமராஜ் நல்ல மனநலத்துடன் இருப்பதாக முடிவு செய்து பிராதை திருத்த உத்தரவிட்டு பிராதும் திருத்தப்பட்டது என்றால் சரிதான். காமராஜின் மனைவி உறையூரில் பெருமாள் கோவில் தெருவில் கதவு எண் 5/39 என்ற முகவரியில் வசித்து வருகிறார் என்றால் கதவு எண்.5/39ல் 41C ல் வசித்து வருகிறார். நான் தற்போது அந்த முகவரியில் தான் வசித்து வருகிறேன். நான் எப்போதும் அந்த முகவரியில் தான் வசித்து வருகிறேன் என்றால் தவறு ஆகும். என் அப்பா இறந்த காலத்தில் இருந்து அந்த முகவரியில் வசித்து வருகிறேன். முதல் வாதி காமராஜின் மனைவி கலைவாணி அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் முற்றிலும் தவறு ஆகும். முதல் வாதி காமராஜ்

இந்த வழக்கின் பிரதிவாதிகள் வீட்டில் சாப்பிட்டு வருகிறார் என்றால் தவறு ஆகும். இன்றுவரை அவர் நல்ல மனநலத்துடன் இருக்கிறார் என்றால் தவறு ஆகும். என் அப்பா கடுமையான உழைப்பாளி என்றால் சரிதான். அவர் விவசாய நிலங்களை பல நபர்களிடம் இருந்து குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தார் என்றால் ராமர் மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை மட்டும் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தார். ராமர் மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்றால் அது குத்தகை பாத்திய சொத்து ஆகும். அதனால் அதை சேர்க்கவில்லை. என் தகப்பனார் 300 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு வீட்டை மட்டும் தான் விட்டு சென்றார் என்றால் தவறு ஆகும். என் தகப்பனார் 10க்கும் மேற்பட்ட கறவை மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் சங்கிலிமுத்து செட்டியார் மனைவி ராஜாமணி அம்மாள் என்பவரிடமிருந்து 4 ஏக்கர் குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் தவறு ஆகும். அதில் 90 சென்ட் மட்டும் குத்தகை சாகுபடி செய்து வந்தார். ராஜாமணி அம்மாளுக்கு நான்கு ஏக்கர் நிலம் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்தக் குத்தகை பாத்தியத்தை விட்டுக் கொடுத்த காரணத்தினால் என் தகப்பனாருக்கு ராஜாமணி அம்மாள் 70 சென்ட் நிலம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதை என் தகப்பனார் கிரைய பத்திரமாக பதிவு செய்து வாங்கிக் கொண்டார். என் அப்பா அந்த கிரைய பத்திரம் பதிவு செய்து வாங்கிய காலத்தில் எனக்கு எத்தனை வயது நடைபெற்றது என்றால் நான் சிறு குழந்தையாக இருந்தேன். அந்த 70

Aoopa

சென்ட் நிலத்தையும் என் அப்பா மனைப்பிரிவுகளாக மாற்றம் செய்து விற்பனை செய்தார். அதில் தன் கைவசமும் சில வீட்டு மனைகளை வைத்துக் கொண்டார். என் தகப்பனார் விற்பனை செய்த 70 செனட் நிலம் தான் தற்போது அண்ணாமலை நகர் என்று அழைக்கப்படுகிறது. என் அப்பா பல நிலங்களில் குத்தகை சாகுபடி உரிமையை விட்டுக் கொடுத்த காரணத்தினால் பணமாகவும், நிலமாகவும் பெற்றிருக்கிறார் என்றால் தவறு ஆகும். நான் 1973ல் பிறந்தேன். ஆனால் எனது பிறப்புச் சான்றிதழ் 1976 இல் பிறந்ததாக உள்ளது. என் அப்பா கதவு எண்.98M, பெருமாள் கோவில் தெரு என்ற முகவரியில் உள்ள ஒரு வீட்டை கிரையம் வாங்கினாரா என்றால் அதில் ஒரு பகுதியை மட்டும் கிரையம் வாங்கினார். மருதாண்டாக்குறிச்சி கிராமத்தில் சர்வே எண்.117/5 ல் 58 செனட் மற்றும் ஒரு ஏக்கர் ஆக கூடுதல் 1 ஏக்கர் 58 செனட் இரண்டு பத்திரங்கள் மூலம் என் தகப்பனார் கிரையம் பெற்றார் என்றால் அவரது பெயரில் கிரையம் வாங்கினார். என் அப்பாவுக்கு பூர்வீகமாக கிடைத்த வீட்டில் இருந்து எந்த வருமானமும் கிடையாது. வழக்குரை சொத்து விபரத்தில் ஆறாவது அயிட்டமாக விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது பிரதிவாதிகள் செல்வராஜ், குணசேகரன், மேகராஜன் மற்றும் 6வது வாதி சரவணன் ஆகியோர்கள் பெயரில் வாங்கப்பட்டு இருக்கிறது என்றால் அது என் அப்பா தான் அவர்கள் பெயரில் கிரையம் வாங்கினார். ஆறாவது அயிட்ட சொத்தை என் தகப்பனார் எந்த காலத்திலும் கிரையம் வாங்கவில்லை என்றும், செல்வராஜ், குணசேகரன், மேகராஜன் ஆகிய மூவரும் மட்டும் தான் கிரையம் வாங்கினார்கள் என்றும், ஆறாவது வாதி சரவணன் வசம் பணம்

Advocate

இல்லாத காரணத்தினால் அவரிடம் கடனுறுதி சீட்டு எழுதி வாங்கி விட்டு அவரையும் ஒரு தரப்பினராக சேர்த்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. ஆறாவது அயிட்ட சொத்தை பொறுத்து பாக பிரிவினை பரிகாரம் கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 1, 5, 6 வாதிகள் திருமணம் நடைபெற்ற காலத்தில் இருந்து தனித்தனியாக பிரிந்து சென்று விட்டார்கள் என்றும் எந்த காலத்திலும் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தது கிடையாது என்று சொன்னால் பொய்யாகும். ஆறாவது வாதி சரவணன் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். நான் 2001 முதல் 2011 வரை ஒரு பைனான்ஸ் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். தற்போது அரசு உரிமம் பெற்று பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். என் தகப்பனாருக்கு உலக விபரம் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் பத்திரம் 10.05.2013ல் செல்வராஜ், குணசேகரன் மற்றும் மேகராஜனுக்கு எழுதிவைத்த ஆவணம் ஆகும். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். இந்த ஆவணத்தை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. என் தகப்பனார் கடந்த 14.02.2015ல் இறந்து போனார். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை தன்னை ஏமாற்றி செல்வராஜ், குணசேகரன் மற்றும் மேகராஜன் ஆகியோர்கள் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கி விட்டதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் தகப்பனார் விரும்பி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை செல்வராஜ், குணசேகரன் மற்றும் மேகராஜன் ஆகியோர்களுக்கு பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றும், தற்போது

வழக்கிற்காக நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1, 3, 7 ஆகியவற்றில் கண்ட மூன்று இலக்க சொத்துக்கள் மட்டும் தான் பாகப்பிரிவினைக்கு உகந்தது என்றும் இதர சொத்துக்களை பொறுத்து நாங்கள் கேட்கக்கூடிய பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்றும் அந்த சொத்துக்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்களை என் சகோதரர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அது பொய்யானது ஆகும். என் தகப்பனார் எவ்வளவு கடன் வைத்து விட்டு சென்றார் என்றால் எனக்குத் தெரிய என் தகப்பனார் எந்த கடனும் வாங்கவில்லை. பிரதிவாதிகள் தான் என் தகப்பனார் மூலம் கடன் வாங்கி விட்டார்கள். பிரதிவாதிகள் அவ்வாறு எவ்வளவு பணம் கடன் வாங்கி இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. யாரிடம் கடன் வாங்கி இருக்கிறார்கள் என்பதும் தெரியாது. ஆறாவது வாதி சரவணன் திருமணத்தின்போது எவ்வளவு பணம் கடன் வாங்கப்பட்டது என்றால் என் அப்பா எந்த கடனும் வாங்கவில்லை. நான் வில்லங்கம் போட்டு பார்த்த போது அதில் ஏற்கனவே உள்ள பதிவுகள் தான் இருந்தது. பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்துக்களுக்கு உரிய மூல ஆவணங்கள் செல்வராஜ், குணசேகரன் மற்றும் மேகராஜன் வசம் தான் இருக்கிறது என்றால் அது தவறானது ஆகும். அந்த ஆவணங்கள் யார் வசம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்களின் வருவாய் துறை பதிவுகள் தற்போது செல்வராஜ், குணசேகரன் மற்றும் மேகராஜன் பெயரில் மாற்றமாக

இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்துக்களை பொறுத்து அவர் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைப்பதற்கு முழு உரிமை இருக்கிறது என்றும் அதை கேள்வி கேட்பதற்கு எங்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adopted